# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### பேச்சு – உயர் பிரிவு – 9ஆம் 10ஆம் வகுப்பு மாணவர்கள்

### தலை நிமிர்ந்து தமிழைப் பரப்புவோம்.

தரணியாண்ட தமிழன் இன்று தரணியெங்கும் தலைகுனிந்து நிற்கிறான். முத்தமிழால் திக்கெட்டும் தீந்தமிழ் பரப்பிய தமிழன் இன்று தமிழன் என்று தன்னை கூறிக்கொள்ளத் தயங்குகிறான். ஏன்? உலக நாகரீகத்தின் தொட்டிலெனக் கருதப்படும் குமரிக் கண்டத்தில் வாழ்ந்த தமிழன் மேற்கத்தைய நாகரீக மோகத்தில் விழுந்து விட்டான்.

தமிழன் எங்கு, எப்போது வாழ்ந்தாலும் தமிழனாக வாழவேண்டும். அவன் வாழ்க்கைச் சோலையில் தமிழ் மணம் கமழ வேண்டும். அவன் நாவில் தமிழ் அருவி ஊற்றெடுத்து ஓட வேண்டும். சாக்கடை நீர் அவ்வருவியில் கலக்கக் கூடாது.

தமிழன் தமிழனாக வாழ முதலில் தமிழ் மொழி பேச எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழியே எம் அனைவரையும் இணைக்கும் பெரும் சக்தி. நாம் கல்வியறிவில், பொருளாதாரத்தில், பட்டம், பதவிகளில் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கலாம். மதத்தால் மாறுபட்டிருக்கலாம். ஆனால் தமிழன் என்பதில் ஒருமைப்பட்டிருக்கிறோம்.

இத்தனைக்கும்மேலாக எம் சிறாருக்கு தமிழ் அறிவைப் புகட்டுவோம். தமிழ் தெரியாத தமிழினம் ஒன்று உருவாகாமல் பார்த்துக் கொள்வோம்.

தமிழன் தமிழ்ப் பண்பாட்டை பெயரளவில் மட்டுமல்லாது அன்றாட வாழ்விலும் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உக்கிரோனியர்களைப் பாருங்கள்! நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவிற்கு புலம் பெயர்ந்தபோதிலும் அவர்கள் இன்றும் தமது மொழி, பண்பாடு, நாகரீகம் என்பவற்றை பின்பற்றி ஏனைய புலம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளார்கள். ஒரு பண்பாடு இன்னொரு நாட்டில் நிலைத்து நிற்குமா? அப்பண்பாட்டினரது மொழி மெத்த வளருமா? என்பது அப்பண்பாட்டுக்குரிய மக்களின் கையில் தான் தங்கியுள்ளது. அவர்கள் சிரத்தையோடு பேணிக் காப்பார்களேயானால் அது மேற்கத்தைய தேசங்களில் மட்டுமல்ல பாரெங்கும் பரந்து நிலைத்து நிற்கக்கூடியது. ஆகவே புலம்பெயர்ந்த முதல் தமிழ்ச் சந்ததியினரான எமது கையிலேதான் அது மெத்த வளருமா அல்லது மெல்லச் சாகுமா என்ற தலை விதி இருக்கின்றது.

தரணியாண்ட தமிழன் மீண்டும் உலகை ஆளவேண்டும். அது அதிகாரத்தால் அல்ல: அறிவியல் சக்தியால், மூளை பலத்தால், தரமான தமிழ்ச் சமுதாயம் ஒன்றை அமைத்து தரணியெங்கும் தமிழன் என்று சொல்லி தலை நிமிர்ந்து நின்றிடுவோம்.